<u>10.08.2026</u>

<u>E.P.N0.49/2025</u>

<u>P.W. 1– திரு.சுப்பிரமணி</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>

நிறைவேற்றுதல் மனுவில் 18 சதவீத வட்டயும், அவார்ட்டில் 12 சதவீத வட்டியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஏதாவது விளக்கம் உள்ளதா என்றால் நான் அதை கம்பெனியில் கேட்டு தான் சொல்லவேண்டும். நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்றுதல் மனுவில் அவார்ட்டில் என்ன உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. Arbitration Award எப்போது வழங்கப்பட்டது என்றால் 23.04.2022 ல் வழங்கப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 பவர் பத்திரம் 23.02.2022 ல் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். Arbitration Award வழங்கப்படுவதற்கு முன்பே எனக்கு பவர் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு பவர் கொடுத்த விவரத்தை நான் Arbitration Award ல் சொல்லவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ஆவணம் எங்கு வைத்து பிறக்கப்பட்டது என்றால் சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் வைத்து பிறப்பிக்கப்பட்டது. அது என் முன்னிலையில் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு ரூ.26,00,000/– கடன் பெற்றுள்ளார் என்று சொல்லி தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா வண்டியை நாங்கள் கைப்பற்றி அதை ரூ.35,00,000/–த்திற்கு விற்பனை செய்து விட்டோம் என்றால் சரியல்ல. ரூ.3,50,000/–த்திற்கு

விற்பனை செய்துள்ளோம். Arbitration Award–ஐ நீதிமன்றத்தில் ஆவணமாக குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி Arbitration Award **ம.சா.ஆ.3** குறியீடு செய்யப்படுகிறது. ம.சா.ஆ.3 ல் வாகனத்தை விற்பனை செய்து அதனை கடனுக்கு சரிசெய்தபோது பாக்கி எதுவும் நிலுவையில் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 உத்தரவு பிறப்பிக்கப்பட்டபின்னர் எதிர்மனுதாரருக்கு அதன் நகல் அனுப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு அனுப்பட்டதற்கான ஒப்புதல் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். தபசில் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். மனுவில் சொல்லியுள்ள 3 தபசில் சொத்துக்களுக்கும் சென்றுள்ளேனா என்றால் களக்காடு மற்றும் பணகுடிக்கு சென்றுள்ளேன். தபசில் சொல்லியுள்ள சொத்து விவரங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் வெளியில் நின்று பார்த்துள்ளேன். உள்ளே சென்று பார்க்கவில்லை. தபசில் சொத்துக்களில் நாங்கள் சொல்லியுள்ள விவரங்கள் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. தபசில் பொருட்கள் எதுவும் எதிர்மனுதாரருக்கு உடையது அல்ல என்றால் சரியல்ல. Arbitrator எங்களால் நியமிக்கப்பட்டவரா அல்லது நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவரா என்றால் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவர். Arbitrator ஐ நாங்கள் ஒரு தலை பட்சமாக நியமித்துள்ளதால் இந்த Arbitration Award சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. Arbitrator திருநெல்வேலி நீதிமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு தனியாக உத்தரவு ஏதாவது

பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தபசில் சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதால் நிறைவேற்றுதல் மனு நிறைவேற்றத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,
Tirunelveli.